


34ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 34 பாலம்: 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2024

# மாகாண அரசு பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக நிதி உதவி

ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அவர்களின் நிதிப்பற்றாக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்ய ஒன்ராறியோ மாகாண அரசு குறுகிய கால நிதி ஊக்குவிப்புத் தொகையை வழங்க இருப்பதாக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் அமைச்சரான ஜில் டன்லொப் (Jill Dunlop) 2024 பெப்பிரவரி 26ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

அத்துடன் இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 2026-2027ஆம் கல்வியாண்டுவரை ஒன்ராறியோ மாகாணத்தில் வாழும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகரிக்க மாகாண அரசு அனுமதிக்க மாட்டாது. இத்துடன் ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் எட்டு வருட காலமாக கல்விக் கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படுத்த மாகாண அரசு அனுமதி அளிக்கவில்லை.

ஆனாலும் ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஒன்ராறியோ மாகாணத்தை தவிர வெளி மாகாணங்களில் வாழும் கனடிய மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை ஐந்து வீதம்வரை அதிகரிக்க மாகாண அரசு அனுமதி அளித்துள்ளது.

$1.3 பில்லியனுக்கும் அதிகமான நிதி உதவித் தொகையை அறிவித்த அமைச்சர் ஜில் டன்லொப், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மனநலம் மற்றும் ஆரோக்கியத்தை கவனிக்கவும், வளாகங்களில் இனவெறி மற்றும் பாகுபாட்டை எதிர்க்கவும், கல்விக்கட்டணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில் வெளிப்படைத் தன்மையை வைத்திருக்கவும் கொள்கைகளை உருவாக்கி வைத்திருக்க வேண்டும் என ஒரு புதிய மசோதாவையும் மாகாண சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் அமைச்சரான ஜில் டன்லொப் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போது, “ஒன்ராறியோ பல்கலைக் கழகங்களுக்கு தற்போது உடனடியாகத் தேவைப்படும் நிதி உதவி வழங்கப்படுவதன் மூலம் ஒரு உறுதித் தன்மையை அவற்றில் உருவாக்கும். அத்துடன் மாணவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் செலவுகளைக் குறைக்க உதவும்” என்றார்.


Minister of Colleges and Universities - Jill Dunlop

அவர் மேலும் தெரிவிக்கையில், “உலகத் தரம் வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்கப் பெயர் பெற்ற ஒன்ராறியோ மாகாண நிறுவனங்களுக்குத் தொடர்ந்தும் அவ்வாறே பட்டதாரிகளை உருவாக்கவும் மாணவர்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதுமே எமது குறிக்கோள்” என்றார்.

ஒரு செய்தி வெளியீட்டின்படி இந்த நிதி ஊக்குவிப்புத்தொகை பின்வருமாறு பங்கிடப்பட்டுள்ளது.

* கல்வியில் நிலையானதன்மையை ஏற்படுத்த அடுத்த மூன்று வருடங்களுக்கு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு $900 மில்லியன் வழங்கப்படுகிறது.

* அதிக தேவைகளைக் கொண்ட நிறுவனங்களுக்கு $200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

* நிறுவனங்களின் கட்டிடங்களைப் புனரமைப்புச் செய்யவும் மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும் $167.4 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

* விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) போன்ற துறைகளை ஊக்குவிக்க உதவும் திட்டங்களுக்கு $100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

* ஆய்வுகளுக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் என $65 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

* மனநல உதவித் திட்டங்களுக்கு $23 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

* செலவுகளில் நீண்டகால சேமிப்பை அடையாளம் காணும் திட்டங்களுக்கு என $15 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

முழுநேர உள்நாட்டு மாணவர்களுக்கான ஒன்ராறியோ மாகாண அரச உதவிபெறும் பொதுக் (Public) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதி கனடாவின் ஏனைய மாகாணங்கள் எல்லாவற்றிலும் அம்மாகாண அரசுகள் வழங்கும் நிதியைவிட மிகக் குறைவாகவே ஒன்ராறியோ மாகாணத்தில் வழங்கப்படுகிறது என மாகாண அரசால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கூறியதைத் தொடர்ந்தே ஒன்ராறியோ மாகாண அரசின் இந்த நிதி வழங்கும் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. ஒன்ராறியோ பல்கலைக் கழகங்களின் அமைப்பு தெரிவித்த அறிக்கையில் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் குறைந்தது 10 பல்கலைக் கழகங்கள் தமது செயல்பாட்டிற்குப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த அளவிலான அரசாங்க நிதியுதவி கிடைப்பதால் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சர்வதேச மாணவர்

தொடர்ச்சி 05 பக்கம்




















GTA Square, 5215 Finch Ave. E., #201, Toronto, ON M1S 0C2, Canada. Tel: 416.282.8059 | Fax: 416.286.0334, Email: vlambaram@sympatico.ca, info@vlambaram.com. Web: www.vlambaram.net





Limited Time Incentives

## No Interim Occupancy

## Only Final Closing



Only 5% Down per year

5% in 2nd years

5% in 3rd years

Free Assignments*

Capped Development Charges $ 0

**FINAL CLOSING : SUMMER 2024**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# தமிழ் தேசியத்தை உதறித் தள்ளிய பதவி வெறி!




இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் தோன்றிய முரண்பாடு தற்போது நீதிமன்றம்வரை சென்றுள்ளது. அதாவது, பதவிகள் மீதான போட்டியும் ஆசையுமே முரண்பாடுகளுக்கு காரணம் என்பதை அனைவரும் அறிவர்.

கட்சிக்குள் இருக்கின்ற மூத்தவர்களால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு முரண்பாடுகள் சுமுக நிலைக்கு வரும் என்று பலரும் எதிர்பார்த்திருந்த நிலையில் பிரச்சினை இன்று நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த 19ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடத்தக் கூடாது என திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

நடந்து முடிந்த இரண்டு பொதுச்சபை கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானது என்றும், செல்லுபடியற்றது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது. தமிழரசு கட்சியின் யாப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட அதிகளவான உறுப்பினர்கள் பொதுச்சபை கூட்டங்களில் பங்குபற்றி குறித்த தெரிவுகளின்போது வாக்களித்துள்ளமையினால், குறித்த கூட்டம் சட்டத்திற்கு முரணானது எனவும் இதன்போது நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் மாவை சேனாதிராஜா, எஸ். சிறிதரன், எம்.ஏ. சுமந்திரன், சண்முகம் குகதாசன் உட்பட தமிழரசுக் கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் எதிர் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த பிரச்சினை குறித்து கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனை சந்தித்து சிறிதரன் தரப்பினர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இரா. சம்பந்தனை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.



தமிழரசுக் கட்சியின் ஜனநாயகத்தை சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து, உடனடியாக மாநாட்டை நடத்துமாறு, இரா.சம்பந்தன் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறிதரனிடம் அறிவுறுத்தினார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்தி, அன்றைய தினமே மாநாட்டையும் நடத்துமாறும் சம்பந்தன் ஆலோசனை தெரிவித்திருந்தார்.

ஆனால், முரண்பாடுகள் மேலும் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. சமூக வலைத்தளங்களில் மோசமான கருத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன. இரண்டாகப் பிளவுபட்டுள்ள இரண்டு தரப்பினரதும் ஆதரவாளர்கள் தங்களது முகநூல்களில் மோதிக்கொள்கின்றதை காண முடிகின்றது.

இந்த மோதல்களில் சாதி, மதம், பிரதேச பாகுபாடு போன்ற பிற்போக்குவாதங்களும் வெளிப்படுகின்றமை அநாகரிகமானதாக உள்ளது. 'வடக்கு கிழக்கில் பிறக்காதவர்கள்' 'வழிப்போக்கர்கள்' 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்பதான சொற்பதங்கள் பதிவிடப்படுகின்றன.

கருத்தை கருத்தால் முறியடிப்பதும், சூழ்ச்சிகளை அறிவால் வெல்வதுமே சிறந்த வழிமுறை. ஆனால், மிகவும் இழிவான கருத்துக்களை வெளிப்படுத்தி அவரவர் தங்களின் உண்மையான முகங்களைக் வெளிக்காட்டுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இதன் பின்னணியில் சுமந்திரனே இயங்குவதாக நம்பப்படுகின்றது.

சமகாலத்தில் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராக கொழும்பில் சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இன்னொருபுறம் அவரால் இயக்கப்படுகின்றவர்கள் கட்சித் தீர்மானங்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்து வருவதாக விமர்சிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக சர்ச்சைக்குரிய ஒரு சட்டத்தை சுமந்திரன் எதிர்க்கிறார். ஆனால், அவருடைய சொந்தக் கட்சியை உடைக்கும் வேலைகளை அவர் தன்னுடைய விசுவாசிகளின் ஊடாகச் செய்கிறார் என்று எதிரணியினர் அவரை குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால், திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் தொடுக்கப்பட்ட அந்த வழக்குகளுடன் தான் சம்பந்தப்படவில்லை என்று சுமந்திரன் மறுத்திருக்கின்றார். ஆனால், எல்லாவற்றிற்கும் பின்னணியில் சுமந்திரனே செயற்படுகின்றார் என்பது சாதாரண தமிழ் பொதுமக்களினது சந்தேகமாகவும் உள்ளது.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்று, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உத்தியோகபூர்மாக பதவிகளை ஏற்கும் நிலைமை ஏற்படுமா? அல்லது மீண்டும் தெரிவுகள் நடத்தும் நிலை வருமா? என்பது தெரியவில்லை.

தமிழ் தேசியம் பேசிக்கொண்டு, தங்களை தமிழ் தேசியத்திற்காக பாடுபடுபவர்களாக வெளிக்காட்டிக்கொண்டு, பதவிக்காக சொந்தக் கட்சிக்குள்ளேயே முட்டிமோதிக் கொண்டு, கட்சியை நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றவர்களை தமிழ் மக்கள் வெறுத்து ஒதுக்கும் நிலைதான் இன்று தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ளது.

## நாட்டு...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

ஜம்மு காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்களுக்கு தனி கவனம் செலுத்தும் வகையில் தேர்தல் திகதிகளை தேர்தல் ஆணையம் நிர்ணயம் செய்கிறது.




இதன் அடிப்படையில் தேர்தலானது 5 முதல் 7 கட்டங்கள்வரை திகதிகள் முடிவு செய்யப்பட்டு வாக்குப்பதிவு நடைபெறுவது வழக்கம். இந்தியாவை பொறுத்தவரை ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் தொடங்கி மே மாதத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி முடிப்பதை இந்தியத் தேர்தல் ஆணையம் வழக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கான தேர்தல் திகதி அறிவிப்பை மார்ச் முதல் அல்லது இரண்டாவது வாரங்களில் இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிடுவது வழக்கம்.

மாநிலத் தேர்தல் அதிகாரிகளுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் வழங்கி உள்ள வரைவுத் திட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு உள்ளிட்ட தேர்தல் முன்னேற்பாட்டு பணிகளை ஏப்ரல் 16ஆம் திகதிக்கு ஏற்றவாறு முடிக்க வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது. தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்த பணிகளை கடந்த 2 மாதங்களாக இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் மேற் கொண்டு வருகிறது. இதற்காக மாநிலத் தேர்தல் ஆணையர்களுடன் தேர்தல் ஆணையம் தொடர்ந்து ஆ லோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் அளித்து வருகிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை இறுதி வாக்காளர் பட்டியலை 22.01.2023 அன்று தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இதன்படி, ஒருங்கிணைக்கப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் தமிழ்நாட்டில் 6 கோடியே 18 லட்சத்து 90 ஆயிரத்து 348 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 3 கோடியே 3 லட்சத்து 96 ஆயிரத்து 330 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 14 லட்சத்து 85 ஆயிரத்து 724 பெண் வாக்காளர்களும், 8,294 மூன்றாம் பாலினத்தவரும் அடங்குவர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள நடிகர் விஜய்யின் 'தமிழக வெற்றிக் கழகம்' இந்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்து விட்டனர். ஜெ. தீபாவும் தற்போதைக்கு அரசியலில் இருந்து விலகி உள்ளதாக அறிவித்துள்ளார். திமுகவுடன் ஏற்பட்ட தொகுதி உடன்பாட்டு பேச்சுவார்த்தையில் வைகோ (மதிமுக) அதிருப்தியில் இருப்பதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளது.

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.net
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# மாகாண...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுமதியை அதிகரிக்கவும் அவர்களது கட்டணங்களை அதிகரிக்கவும் தொடங்கின. சர்வதேச மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் கனடிய மாணவர்களுக் கான கல்விக்கட்டணத்தை விட பல மடங்கு அதிகமாகும்.




2020-2021ஆம் கல்வியாண்டில் சராசரி பல்கலைக்கழகக் கட்டணம் உள்நாட்டு மாணவர்களுக்கு $7,938ஆகவும் சர்வ தேச மாணவர்களுக்கு $40,525 ஆகவும் இருந்தது என கணக்காளர் நாயகம் தனது 2022ஆம் ஆண்டு அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

2014-2015ஆம் கல்வியாண்டில் ஒன்ராறியோ பல்கலைக்கழகங்கள் அனுமதித்த சர்வதேச மாணவர்களது எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு சர்வதேச மாணவர்களை 2021-2022ஆம் கல்வியாண்டில் அனுமதித்துள்ளன. இதே காலப்பகுதியில் கல்லூரிகள் தாம் அனுமதித்துள்ள சர்வதேச மாணவர்களது எண்ணிக்கையை மூன்று மடங்கால் அதிகரித்துள்ளன. இவ்வாறு ஒட்டாவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அமைப்பான The Smart Prosperity Institute 2023ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனடிய மத்திய அரசின் அறிக்கையின்படி ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து அனுமதி அளிக்கப்பட்ட மொத்த சர்வதேச மாணவர்களின் விபரம்:

| ஆண்டு | மாணவர் |
|---|---|
| 2015 | 64,090 |
| 2016 | 85,970 |
| 2017 | 107,750 |
| 2018 | 122,975 |
| 2019 | 146,570 |
| 2020 | 93,170 |
| 2021 | 180,575 |
| 2022 | 238,570 |
| 2023 | 240,820 |

ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அரசாங்க நிதியில் உள்ள பற்றாக்குறையை ஈடுசெய்யவும், உள்நாட்டுக் கல்விக் கட்டணங்களின் உயர்வைத் தவிர்க்கவும் சர்வதேச மாணவர்களது அனுமதியை நம்பியுள்ளன என 140 பொது உயர்நிலைப் பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சங்கத்தின் துணைத்தலைவரான அலன் ரோய் (Alan Roy) கூறியுள்ளார்.

கடந்த மாதம் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து அனுமதி அளிக்கப்படவுள்ள சர்வதேச மாணவர் களது எண்ணிக்கையை அரைவாசியாக அடுத்த இரண்டு வருடங்களுக்கு குறைக்க உள்ளதாக கனடிய மத்திய அரசு அறிவித்திருந்தது. தங்களிடம் பட்டப்படிப்பைப் பெற்று பட்டதாரியானவு டன் கனடியக் குடியுரிமை வழங்கப்படும் எனப் பொய்யாக வாக்குறுதி அளித்த நிறுவனங்களும், இலகுவாக பட்டப்படிப்பு சான்றிதழ்களை வாரி வழங்கும் நிறுவனங்களும் (Diploma Mills) மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு முக்கிய காரணமாக இருந்தன.

அத்துடன் இவ்வாறு அதிகளவு சர்வதேச மாணவர்கள் ஒன்ராறியோவிற்கு கல்வி கற்க வந்தது ஒன்ராறியோ மாகாணத்தில் வீட்டுகளின் பற்றாக்குறையையும், வாடகை உயர்வையும் ஏற்படுத்தியதையும் மத்திய அரசு ஒரு காரணமாகச் சுட்டிக் காட்டியிருந்தது.

ஒன்ராறியோ மாகாண அமைச்சர் ஜில் டன்லொப் மாகாணங்களுக்கு எந்தவித எச்சரிக்கையும் கொடுக்காமல் மத்திய அரசு ஒருதலைப்பட்சமாக எடுத்த இந்த திடீர் முடிவை விமர்சித்து ஊடகங்களுக்கு தனது கருத்தை வெளியிட்டிருந்தார்.


Minister of Colleges and Universities Jill Dunlop

Higher Education Strategy Associates நிறுவனத்தின் கணிப்பின்படி 2023ஆம் ஆண்டில் ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சர்வதேச மாணவர்களது கட்டணங்கள் மூலம் $3.3 பில்லியனையும், மாகாண அரசின் நிதியில் இருந்து $1.9 பில்லியனையும், உள்நாட்டு மாணவர்களது கட்டணத்தில் இருந்து $1 பில்லியனையும் பெறுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தில் பொது நிதியுதவி பெறும் 24 கல்லூரிகளில் ஒன்பதிற்கு மேற்பட்ட கல்லூரிகளில் உள்நாட்டு மாணவர்களைவிட சர்வதேச மாணவர்கள் அதிக அளவில் உள்ளனர்.

Higher Education Strategy Associates நிறுவனத்தின் தலைவர் அலெக்ஸ் அஷர் (Alex Usher) ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "2024ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக பணவீக்கம் மற்றும் சர்வதேச மாணவர்களின் இழப்பு ஆகிய வற்றின் மூலம் ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் $2 பில்லியனுக்கும் அதிகமான தொகையை இழக்கின்றன.

ஒன்ராறியோ மாகாண அரசின் இவ் அறிவிப்பு இந்த இழப்பின் 20%ஐயே நிவர்த்தி செய்கிறது. இந்த உதவி ஒன்ராறியோ மாகாண கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஓர் உறுதித் தன்மையை உருவாக்க மாட்டாது. மாகாண அரசின் இந்த உதவி மூலம் பிரச்சினைகளை தீர்ப்பதைவிட அவ் வாறான ஒரு தோற்றத்தை மக்களிடையே ஏற்படுத்தவே அரசாங்கம் முயல்கிறது" என்றார்.

"ஒன்ராறியோ மாகாண பழமைவாதக்கட்சி அரசாங்கம் கல்லூரிகள் மற்றும் பல் கலைக்கழகங்களின் நெருக்கடியை எந்த வகையிலும் புரிந்து கொள்ளவில்லை. என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிறுவனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த உதவி போதாது" என்று புதிய ஜனநாயகக்கட்சியின் ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினரா பெக்கி சற்லர் (Peggy Sattler) ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்து காத்திருக்கும்
# இந்திய நாடாளுமன்ற தேர்தல்

நாட்டின் தலையெழுத்தை தீர்மானிக்கும் இந்திய நாடாளுமன்ற தேர்தல் திகதி விரைவில் அறிக்கப்படவுள்ள நிலையில், ஏப்ரல் 16ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடத்துவது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளதாக வெளியாகி உள்ள செய்தியால் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாடே எதிர்பார்த்து காத்திருக்கும் தேர்தலில் மத்தியில் ஆட்சி மாற்றம் வரப்போகிறதா அல்லது பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியே மூன்றாவது முறையாக தொடர்ந்து ஆட்சியை பிடிக்கப்போகிறதா என்ற பெரும் எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினரும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளும் தேர்தல் அறிவிக்கும் முன்னரே தங்களது பிரச்சாரத்தை தொடங்கி விட்டனர். மாநாடுகள், கூட்டங்கள், யாத்திரைகள் என நாடாளுமன்ற தேர்தல் களம், திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது.




பிரதமர் நரேந்திரமோடி, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங் களுக்கு அடிக்கடி வருவது, திட்டங்களை தொடங்கி வைப்பது போன்ற நடவடிக்கை களால் தென் மாநில மக்களின் வாக்கு களை பெற நினைக்கிறார். வட மாநிலங் களைவிட தென் மாநிலங்களுக்கு பாரதிய ஜனதா கட்சி முக்கியத்துவம் அளித்து பாரதிய ஜனதா கட்சிமீது நம்பிக்கையை ஏற்படுத்தவும் அவர் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார். தென் மாநிலங்களில் எப்படியும் வாக்கு சதவீதத்தை அதிகரித்திட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியா கூட்டணி கட்சிகளில் காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அயோத்தி ராமர் கோயில் விழாவை புறக்கணித்து, அரசியல் நோக்கத்தில் பாஜக செயல்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ளனர். காங்கிரஸ் கட்சி யின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் தன்னுடைய பாத யாத்திரையை தொடங்கி நடத்தி வருகிறார். திமுக தன் பங்கிற்கு இளைஞரணி மாநாட்டை பிரம்மாண்டமாக நடத்தி அதில் பாரதிய ஜனதா கட்சியை ஆட்சியை விட்டு அகற்றுவோம் என்று முழங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை பிரதான கட்சிகளான திமுக மற்றும் அதிமுக கூட்டணி பேச்சுவார்த்தைகளை பேசுவதற் கும், நாடாளுமன்ற பணிகளை மேற் கொள்ளுவதற்கும் குழுக்களை நியமித்து தேர்தல் வேலைகளை தொடங்கிவிட்டன. விரைவில் பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட கட்சிகளும் தேர்தல் கூட்டணியை உறுதி செய்யும் பணிகளில் ஈடுபட முடிவு செய்துள்ளன.

இந்தியாவை பொறுத்தவரை நாடாளு மன்றத் தேர்தல்கள் பல்வேறு கட்டங்களாக நடைபெறுவது வழக்கம். பாதுகாப்பு பிரச்சினைகள் அதிகம் உள்ள

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)

# ஜெனீவா கூட்டத் தொடரை சமாளிக்கத் தயாராகும் இலங்கை

- விகிர்தன் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடர் கடந்த 26ஆம் ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது. இந்த கூட்டத்தொடர் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிவரை நடைபெறும்.

இந்த மாநாட்டில் இலங்கை மீது ஏற்கனவே உள்ள குற்றச்சாட்டுக்களுடன் புதிதாக இரண்டு விடயங்களும் சேர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இணையவழி பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை நாட்டில் அமல்படுத்துவதற்கு தீவிர முயற்சிகளை அரசாங்கம் எடுத்துள்ள நிலையில், மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரில் அவை கவனத்தில் கொள்ளப்படுமென மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்கள், மார்ச் மாதம் 4ஆம் திகதி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதன்போது ஆணையாளரின் வாய்மூல விளக்கமளிப்பும் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், இக்கூட்டத்தொடரில் கலந்துகொள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று மார்ச் முதல் வாரத்தில் ஜெனிவா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளில் இலங்கை அடைந்துள்ள இலக்குகள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.




இம்முறை இலங்கை அரசாங்கத்தின் மீது சில அழுத்தங்களை மனித உரிமைகள் பேரவை பிரயோகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவை இணையவழி பாதுகாப்புச் சட்டம் மற்றும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பானதாகவே இருக்கும். இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இலங்கை அரசாங்கம் தமக்குள் கலந்துரையாடல்களையும், ஆலோசனைகளையும் மேற்கொண்டுள்ளது.

குறித்த சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மாவிடம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்துள்ளார்.

அரசாங்கம் குறித்த சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு சிவில் அமைப்புக்களின் பரிந்துரைகளையும் உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் ரிச்சர்ட் வர்மாவிற்கு தாம் தெளிவாக எடுத்துரைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பின் போதும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா சர்ச்சைக்குரிய இச்சட்டமூலங்கள் குறித்து கலந்துரையாடியதாகவும் அதற்கு ஜனாதிபதி ரணில் அவருக்கு விளக்கங்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


அத்துடன், நாட்டிற்கு வருகை தந்திருந்த அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு தொடர்புகள் குழுவின் சிரேஸ்ட தொழில்சார் பணிக்குழாமின் பிரதிநிதிகள் இணையவழி பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட சட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் ஆராயவும், இணையவழி பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட அண்மைய சட்டங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் குறித்து கலந்துரையாடியதாகவும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை அவர்கள் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இலங்கை மேற்கொள்ளும் புதிய நகர்வுகளில் ஜனநாயக மீறல்கள் உள்ளமை குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி உலகின் மனித உரிமைகள் சார்ந்த அமைப்புக்களும் இப்புதிய

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)



# KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION CANADA

இரா போசன விருந்துடன்,
மாபெரும் இன்னிசை நடன நிகழ்வு

**APRIL 6 2024**

# மகுடம்
# MAHUDAM 2024



Metropolitan Center- Banquet Hall In Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

## நாமும் நமது இல்லமும் 649

# நிலைமாறும் ஆதன வியாபாரம்!




ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (Greater Toronto Area) ஆதன வியாபாரம் மாறுகின்றது. கடந்த இரு (2) வருடங்களிற்கு மேலாக இருந்த நிலைமை தற்போது சிறிதளவு மாறுவதனைக் காணலாம்.

கடந்த வருடங்களில் (2022-2023) ஆதனம் வாங்கும்போது, வாங்குபவர்கள் பலவித மான நிபந்தனைகளை (conditions), உதாரணமாக அடமானக்கடன் பெறுதல் (Mortgage Finance Condition) ஆதனத்தை சோதனை செய்தல் (Condition on Inspection) வைத்தே ஆதனம் வாங்கினார்கள். இதற்கு ஆதன உரிமையாளர்களும் இடம் கொடுத்தனர். ஏனெனில், போதிய வாங்குநர்கள் சந்தையில் இருக்கவில்லை. ஆனால், பெப்ரவரி 2024இல் இந்நிலைமை சிறிதளவு மாறுவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

இன்றைய நிலையில் ஆதனத்தை சென்று பார்த்தபின்பு கேள்விப்பத்திரம் (Agreement of Purchase and Sale) கொடுப்பதற்கு முன்பாக வாங்குவோரால் பல கேள்விப்பத்திரங்கள் வந்திருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் வாங்குவோர் மிகவும் சஞ்சல மடைவதனைக் காணலாம். பெப்ரவரி 2024இன் மத்திய காலப்பகுதியில் விற்கப் பட்ட வீடுகளில் (Low-rise /அடுக்குமாடி மனைகள் தவிர்ந்த) 40%இற்கு அதிகமானவை கேட்கப்பட்ட விலையைவிட அதிகமாகவே விற்கப்பட்டதாக TRREB (Toronto Regional Real Estate Board) தெரிவித்துள்ளது.



2022இன் ஆரம்பத்தில் அல்லது 2021இன் இறுதிப்பகுதியில் இந்த பெறுமான அதிகமாக (70% - 80 %) காணப்பட்டது. இதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அனுபவமிக்க ஆதன முகவர்கள் கேள்வி விலையை (Asking Price) கணிசமாக குறைத்து, சந்தைப்படுத்துவது. இதனால் ஆதனம் தேடும் பலர் தமது கேள்விப் பத்திரத்தை முன்வைப்பதனால் போட்டிகள் ஏற்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றது.

மேலும் போதியளவு ஆதனங்கள் சந்தைப் படுத்தப்படாததும் மற்றைய காரணமாக லாம். பொதுவாக ஏப்ரல், மே காலப் பகுதியில் அதிக ஆதனங்கள் சந்தைப் படுத்தப்படுவதனால் இந்நிலைமை சற்று தளர்வடையலாம் என எதிர்பார்க்கலாம்.

2023இன் இறுதிப்பகுதியில் நீண்டகால அடமானக்கடன் (3 years / 5 years Mortgage Rate) வட்டிவீதம் இறங்கி காணப்பட்டது. இதனால் இந்தக் காலப்பகுதியில் மேலதிகமானோர் அடமானக் கடன் பெறக்கூடிய வசதிகள் ஏற்பட்டு இருந்தது. இவ்வருடத்தின் இறுதிப்பகுதியில் கனடிய மத்திய வங்கி வட்டிவீதத்தை குறைக்கலாம் என எதிர்பார்ப்பதால் பொருளாதார அதிகரிப்பை எதிர்பார்க்கலாம் என தெரிய வருகின்றது.

வெளிநாட்டு மாணவர்களின் வருகையை மத்திய அரசு மட்டுப்படுத்தியதால், ஆதன வியாபாரத்தில் ஒருவித தாக்கம் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கலாம். எனினும், இந்த மாதம் வெளிவந்த பணவீக்க அறிக்கை சார்பாக இருப்பதால் முதலாவது வட்டிவீத இறக்கத்தை ஜூனில் (June) எதிர்பார்க்கலாம்.

மேலும் வட்டிவீதம் அதிகரிக்கப்படாது என ஜனவரி 24, 2024 அன்று கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் ரிவ் மக்லெம் (Tiff Macklem) அறிவித்திருந்தது வாடிக்கை யாளர்களிற்கு ஒருவகையான நிம்மதியைக் கொடுத்துள்ளது. எனினும் கனடியர்கள் மிகவும் கவனமாகவே உள்ளார்கள். மேலும் ஆதனம் வாங்குவதற்காகப் பலர் போட்டி போட்டாலும், அளவுக்கு அதிக மாக தமது விலையை கொடுப்பதற்கு அவர்கள் முன்வருவதில்லை என்பதும் நிதர்சனமான உண்மை. உதாரணமாக ஒரு குடும்பம் (Family) ஆதனம் வாங்குவதற்கு $1.2 மில்லியனிற்கு நிதி நிறுவனம் அடமான எல்லை கொடுத்து இருந்தாலும் இவர்கள் $1.1 மில்லியன் என்ற பெறுமதியை தாண்ட விரும்ப வில்லை. இது ஒரு சிறந்த முடிவு. இதற்கு முக்கிய காரணமாக 2021 ஆண்டு மற்றும் 2022இன் ஆரம்பப் பகுதியில் ஆதனம் வாங்கியவர்கள் கடந்த இரு வருடங்களாக படும் துன்ப நிலைமைகளை இவர்கள் அவதானித்திருப்பார்கள் போலும்.

இதற்கு மேலும் ஓர் உதாரணத்தை சொல்லலாம். அண்மையில் Whitby பகுதியில் ஒரு வீடு $1.479 மில்லியனிற்கு சந்தைப்படுத்தப்பட்டது. ஐந்து (5) கேள்விப்பத்திரங்கள் வந்திருந்தபோதிலும் $1.451 மில்லியனிற்கே விற்கப்பட்டு இருந்தது.

போட்டி கேள்விப்பத்திரங்கள் இருந்த போதிலும் மேலதிக பணத்தை கொடுத்து ஆதனத்தை வாங்குபவர்கள் வாங்க விரும்பவில்லை என்பதே உண்மையான காரணம். ஆதனத்திற்குரிய தகுந்த விலையே கொடுக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பு. இதுபோன்ற முடிவுகளால் வீட்டின் அதிகரிப்பு கணிசமாகவே காணப்படு கின்றது. இது ஆதன வியாபாரத்திற்கு ஆரோக்கியமானதும், சிறப்பானதாகும். பங்குனி (March) மாதம், வெப்பநிலை அதிகரிப்புடன் தொடங்குவதால் ஆதன வியாபாரம் சிறப்படையும் என எதிர்பார்க்கலாம்.

## ஜெனீவா...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

சட்டங்கள் தொடர்பில் அவதானிப்பை செலுத்தி வருகின்றன.

மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி தொடர்பான தரத்தில் இலங்கை பின்னோக்கிச் செல்வதாக மனித உரிமை கள் கண்காணிப்பகம் அண்மையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.




இலங்கை தவறான நிர்வாகம் மற்றும் பொறுப்புக்கூறல் குறைபாடு காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் தொடர்ந்தும் சிரமத்திற்குள்ளாகி வருவ தாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


சமூக நீதி மற்றும் உரிமைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கு பதிலாக, கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதிலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச கவனத்தை மட்டுப்படுத்துவதிலும் ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் கவனம் செலுத்தி யுள்ளது எனவும், மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை மீறல், ஜனநாயக மீறல் என விமர்சிக்கப்படும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்கம் கூறுவது மனித உரிமைகள் மீதான சர்வதேச கவனத்தை திசை திருப்புவது, அல்லது சமாளிப்பது என்கின்ற வகையிலேயே அமையும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டிலும் தனது கருத்துக்களையும் விளக்கங்களையும் இலங்கை அரசாங்கம் இவ்வாறே முன்வைத்து தப்பித்துக்கொள்ள முயலும் என்பதே உண்மை.




* நூறுபேர் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால் ஓர் இல்லத்தை இல்லமாக்க ஒரு பெண் வேண்டும். மகளிர் தின வாழ்த்து.



# தமிழரின் காலடிச் சுவடுகளை தேடி ஒரு பயணம்
# முசிறி பட்டணம் அகழாய்வு

கண்ணன்

தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, சமீபத்தில் தமிழக சட்ட மன்றத்தில் நிதிநிலை அறிக்கையை சமர்பித்தபின் தனது உரையில், “தமிழகம் மட்டுமின்றி பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் காலச்சுவடுகளைத் தேடி கேரள மாநிலத்திலுள்ள முசிறி, ஒடிசா மாநிலத்திலுள்ள பாலூர், வெங்கி கர்நாடகத்திலுள்ள ஆந்திர மஸ்கி ஆகிய தொல்லியல் சிறப்புமிக்க இடங்களிலும் இந்த ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்படும்” என்று தெரிவித்திருந்தார்.

அந்த காலச்சுவடுகளைத் தேடி நாமும் பயணத்தைத் தொடங்கினோம்.

### முதலில் முசிறி பட்டணம்:

முசிறி பட்டணம் அகழாய்வு, கேரள வரலாற்று ஆராய்ச்சி நிறுவனத்தால் (KCHR) 2007ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2016இல் இந்திய ஒன்றிய அரசால் முடக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கீழடி அகழாய்வு ஒன்றிய அரசால் முடக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மீண்டும் கீழடியில் அகழாய்வு செய்து சங்க கால தமிழரின் மறைந்த பெருமையை வெளியே கொண்டு வந்தது. அதுபோல, முசிறி அகழாய்வு மீண்டு வருமா என்று ஆவலுடன் தமிழ் ஆர்வலர்கள் காத்திருக்கின்றனர்.

### முசிறி அகழாய்வு தமிழருக்கு அந்தளவு முக்கியமானதா?

“வரலாற்றுக்கு முந்தைய காலத்தில், தமிழ்நாடு என்பது பரந்து, விரிந்து, இன்றுள்ள தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா என தென்னிந்தியாவின் பெரும் பகுதியை உள்ளடக்கியதாக இருந்திருக்கும் என்றே கருதுகிறோம். அதில் பட்டணம் நகரம் முக்கியமான துறைமுகமாக இருந்தது” என்று முசிறி பட்டணத்தில் அகழாய்வு செய்துள்ள தொல்லியல் ஆய்வாளர் செரியன் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கேரளாவின் பழங்காலத்தை, அதாவது பண்டைய சேர நாட்டின் வரலாற்றை தெரிந்து கொள்வதற்கான முதன்மை ஆதாரமாகவும், இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான சங்க இலக்கியமே திகழ்கிறது. சங்க இலக்கிய குறிப்புகள், உலகின் செல்வாக்கு மிக்க வணிக வழித்தடங்களில் ஒன்றாகவும், சேர நாட்டின் பிரபல துறைமுக பட்டணமாகவும் முசிறி இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. தென்னிந்தியா, பெர்சியா, ஒன்றிய கிழக்கு மற்றும் வடக்கு ஆபிரிக்கா, கிரேக்கம், சீனம், அரேபியா, சீனா, ஓமான், ஸ்பெயின், எகிப்து, ஒன்றிய தரைக் கடலில் இருந்த ரோமானியப் பேரரசு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு மையமாக அக்காலத்தில் முசிறி துறைமுகம் இருந்துள்ளது.

முசிறி துறைமுகத்தில் கடலோடு கலக்கும் ஆறு சுள்ளியம் பேரியாறு. இதுதான் இப்போது பெரியாறு என சொல்லப்படுகிறது. இந்த ஆற்றின் வழியாக உள்நாட்டுக்குக்கூட கலம் செல்லுமாம். பாண்டிய அரசன் அடுபோர்ச் செழியன் இந்த முசிறியை முற்றுகையிட்டு அங்கு வந்த அழகிய படிமப் பொருட்களைக் கைப்பற்றிச் சென்றான் என்பது புலவர் எருக்காட்டூர் காயங்கண்ணனார் தரும் செய்தி.



சங்க இலக்கிய சான்றுகளின்படி, கொச்சிக்கு வடக்கே 25 கி.மீ. தொலைவில் இருக்கும் கொடுங்கல்லூர் எனும் ஊரே பண்டைய முசிறி எனும் யூகம் வரலாற்று ஆய்வாளர்களிடையே இருந்து வந்தது. கொடுங்கல்லூருக்கு அருகே உள்ள பட்டணம் எனும் சிறு கிராமத்தில் மணலுக்கடியில் பழங்கால பானை ஓடுகள், வெளிநாட்டு நாணயங்கள், சிறு சிறு மிளிரும் கற்கள் போன்றவற்றை அப்பகுதி மக்கள் அவ்வப்போது கண்டெடுத்து வந்தனர். இதனையடுத்து, கேரள வரலாற்று ஆய்வு நிறுவனம் 2007ஆம் ஆண்டு பட்டணத்தில் அகழ்வாய்வை தொடங்கியது.

‘பொன்னோடு வந்து கறியோடு பெயரும் வளங்கெழு முசிறி’ என்கிறது சங்கப் பாடல் ஒன்று. வெளிநாட்டினர் முசிறியில் பொன்னை கொடுத்துவிட்டு நல்ல மிளகுடன் திரும்புவர் என்பது இதன் பொருள். கிரேக்க, ரோமானிய மக்களை பண்டைய தமிழ் நூல்கள் யவனர் எனக் குறிப்பிடுகின்றன. இவர்கள் கலம் என்னும் கப்பலில் பொன்னோடு வந்து மிளகோடு மீளும் வாணிகம் செய்துள்ளனர்.

இரண்டாம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட ரோமானியப் பேரரசின் வரைபடங்களிலும் முசிறி நகரம் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் முசிறியை முஸ்றிஸ் என அழைத்திருக்கிறார்கள். ரோமானிய எழுத்தாளர் பிளினி தி எல்டர், முசிறி நகரத்தை ‘இந்தியாவின் முதல் சந்தை’ என்று குறிப்பிடுகிறார்.

இந்த அகழாய்வில் பட்டணத்தில் ஒரு கடல்சார் வணிக நகரம் இருந்ததற்கான தரவுகள் கிடைக்கத் தொடங்கின. தங்க ஆபரணங்கள், கண்ணாடி மணிகள், சேர மன்னர்கள் கால நாணயங்கள் வரை பல கலைப்பொருட்கள் கிடைத்தன.

அக்காலத்தில் இந்த துறைமுகத்தில் இருந்துதான் வாசனை திரவியங்கள், ரத்தினங்கள், யானைத் தந்தம், பட்டு போன்றவை வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன என்பதற்கான ஆதாரங்களும் இந்த அகழாய்வில் கிடைத்தன.

இது தொடர்பாக இந்த அகழாய்வை மேற்கொண்ட செரியன் கூறும்போது, “அக்காலத்தில் பட்டணம் நகரம் பல்வேறு நாடுகளில் இருந்து வந்தோருக்கு ஒரு நுழைவாயிலாக இருந்தது என்று நம்புகிறோம். எங்களுக்கு கிடைத்த எலும்புத் துண்டுகளை டிஎன்ஏ சோதனைக்கு உட்படுத்தியபோது, அவை மேற்கு மற்றும் தெற்கு ஆசியப்பகுதி, மற்றும் ஐரோப்பியப் பகுதியில் இருந்து வந்தவர்களின் எலும்புகள் என்பதை கண்டறிந்தோம்.”

இரும்புக் காலம் முடிந்து, வரலாற்றுக்கு முந்தைய காலத்தில், இந்தியாவின் மேற்கில் உள்ள அரேபிய நாடுகள் மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து வரும் வணிகர்கள் பட்டணம் நகரத்தில் வாணிபம் செய்ததற்கு அடையாளமாக பல வெளிநாட்டு ரத்தின கற்களும் முசிறி அகழ்வாய்வில் கிடைத்தன. 146 நாணயங்களை கண்டறிந்தோம். விதவிதமான குடுவைகள் கிடைத்தன. அந்த குடுவைகளை கூர்ந்து நோக்கியபோது, வெளிநாடுகளில் இருந்து வந்தோர் கொண்டு வந்த குடுவைகள் அவை என்று தெரிந்தது. அதற்கு சாட்சியாக மேல்பகுதியில் ஒவ்வொரு நாட்டின் பிரத்யேக அலங்கார வேலைப்பாடுகள் தெரிந்தன. அதேபோல படகுகளை கட்டி வைப்பதற்கான இரும்பு கம்பிகள் கிடைத்தன” என்று தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரோமப் பேரரசு காலத்தை சேர்ந்த முத்திரை மோதிரமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரோமானியப் பேரரசர் ஆவதற்கு முன்பு அகஸ்டஸ் சீசரிடம் இதுபோன்ற மோதிரம் ஒன்று இருந்துள்ளது.

“ரோமானியர்கள் மிளகைத் தேடி இங்கு வந்தனர். அக்காலத்தில், மேற்குலகிற்கு தங்கத்தைப்போல மதிப்புமிக்கதாக மிளகு இருந்தது. அதனால் மிளகு, ‘கறுப்புத் தங்கம்’ என்றும் அழைக்கப்பட்டது,” என்கிறார் கேரளாவின் வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலின் தலைவர் டாக்டர் பி.கே. மைக்கேல் தர்கன்.

முசிறி பட்டணம் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டவற்றில் முக்கியமானது, அக்காலத்திலேயே தமிழர் கழிவறைகள் கட்டி பயன்படுத்தியுள்ளனர் என்பதுதான். “ஆறு பானைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கடைசியாக வைக்கப்பட்ட பானை கூம்பு வடிவில் மண்ணில் புதைக்கப்பட்டு இருந்தது. இந்த கழிவறை மேலைதேச கழிப்பறை (western toilet) என்று அறியப்படும் கழிவறையை ஒத்திருந்தது. இதே அமைப்பில் ஆறு கழிவறைகளை கண்டறிந்தோம்,” என்கிறார் ஆய்வாளர் செரியன்.

முசிறி, 14ஆம் நூற்றாண்டில் திடீரென காணாமல் போனது. அதன்பிறகு துறைமுக வணிகத்தின் முக்கிய மையமாக

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# துணிவும் தீரமும் கொண்ட பெண் எழுத்தாளர் அம்பை



T. சிவபாலு


தமிழ் எழுத்தாளர்களுள் நீண்ட கால வரலாற்றில் ஆண்களே முதன்மை வகித்துவந்துள்ளனர். ஆனால் சில பெண் எழுத்தாளர்களும் தங்கள் எழுத்தாற்றலால் தமது நிலையை இலக்கிய உலகில் தக்கவைத்துள்ளனர். பெண்களை இரண்டாம் படியில் வைத்துப் பார்த்தவர்கள் இந்திய மரபுவாதிகள். இந்தியப் பாரம்பரியத்தின் விளைவாக பெண்கள் இயல்பு வாழ்க்கையில் காலடியெடுத்துவைத்தால் தானுண்டு தன் குடும்பம் உண்டு என வாழப் பழகிக் கொள்ளபவர்கள். கணவன், பிள்ளைகள், பெற்றோர் என அவர்களின் நலன்சார்ந்து வாழ வேண்டியவர்களா ஆக்கப்பட்ட சமுதாய கட்டுக்கோப்பை மீறமுடியாதவர்களாக குடும்பத்தோடு இணைந்து விடுபவர்கள். இந்தியரில் விரல்விட்டு எண்ணக் கூடிய பெண் தமிழ் எழுத்தாளர்களே இருந்துள்ளனர். இந்தச் சூழ்நிலையின் மத்தியில் சடங்கு, சம்பிரதாயம் என அவற்றிற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தவர்களின் மத்தியில் ஒரு சிலர் அந்த நிலைமைகளை மீறிக்கொண்டு வெளியே வந்துள்ளனர்.

லஷ்மி என்னும் இயற்பெயர் கொண்டவர் அம்பை. அவர் தென்னகத்துத் திராவிடர் பெண் தெய்வமாம் அம்பையின் பெயரைச் சூடிக்கொண்டு எழுத்துலகில் பிரவேசித்தவர். அவரைப்பற்றி பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான வெங்கட் சாமிநாதன் அவர்கள் குறிப்பிடும்போது "வேடிக்கையான முரண்தான், லஷ்மி என்ற பெயர் கொண்ட, ஒரு தீவிர பெண்ணிய வாதி இனிமையான பழமையின் நினைவலைகளை எழுப்பும் வகையில் 'அம்பை' என தனக்குப் புனைபெயர் சூட்டிக் கொண்டது. ஆனால் அந்தப் பெயர் பெங்களூரில் தன் பாட்டியின் கவனிப்பில் வளர்ந்து வந்த ஒரு பள்ளிச் சிறுமி தானும் தமிழில் கதை எழுதுகிறேன் என்று மற்ற பெண் எழுத்தாளர்களைப் போல ஒப்புக் கொள்ளப்பட்ட வரம்புக்குள் 'நல்ல' கதைகள் எழுதத் தொடங்கியபோது சூட்டிக் கொண்ட பெயர் அது. எழுதும் திறமையும் ஆசையும் தான் அம்பையுடையது. அவர் கதைகள் நமக்குக் காட்டிய உலகமோ அம்பையின் பாட்டியும் அம்மாவும் கொண்டிருந்த பாரம்பரிய நம்பிக்கைகளும் அம்பைக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்ததும் தான். அந்த உலகம்தான் அம்பைக்கு அந்த வயதில் படிக்கக் கிடைத்த எழுத்துக்களும்." என்று குறிப்பிடுகின்றார்.

இந்திய சமுதாயத்தில் பெண்களுக்கான இரண்டாந்தர நிலைபற்றி அம்பை சிந்தித்து தனது எழுத்துகளில் அவற்றிற்கான விடைகளைத் தேடியுள்ளார். பெண்ணியம் சார்ந்த கருத்துகளை மிகத் துணிந்து தனது கதைகளில், எழுத்துக்களில் வடித்து வெற்றி கண்டவர். பள்ளி மாணவியாக இருக்கும்போதே எழுத ஆரம்பித்த அம்பை தனது புரட்சிகர எழுத்துகளைப் பிரசுரிக்க பல பத்திரிகைகளை நாடியபோதிலும் அவை அவருக்குக் கைகொடுக்க முன்வரவில்லை. அவரது எழுத்துகள் இந்திய சமுதாய மரபு முறைகளுக்கு மாறானவையாக அவற்றைக் கண்டிப்பனவாக அமைந்தமையே அதற்குக் காரணமாக அமைகின்றது. பெண் என்றால் கணவனை இழந்தாலோ அன்றி விடப்பட்டாலோ வீட்டு மூலையில் ஒதுங்கி இருக்கவேண்டியவள் என்ற அடிப்படை வேதாந்தத்தை உடைத்தெறியும் பாங்கில் எழுதத் தொடங்கியமையே பிரபல பத்திரிகைகள் அவரது படைப்புகளை பிரசுரிக்க மறுத்தற்கான காரணங்கள் ஆகும்.

பெண் எழுத்தாளர்களின் வரவு அதிகரிக்கத் தொடங்கிய காலகட்டத்தில் தான் அம்மையும் வந்திருந்தார். எனினும் மற்றைய எழுத்தாளர்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் வகையில் அமைந்தது அவரது கதைகள். 'அந்தி மாலை' (நாவல்), 'சிறகுகள் முறியும்' (1976) - (முதலாவது தொகுதி - ஓர் பெண்ணின் வாழ்வில் ஏற்படும் பலவிதமான சம்பவங்களை சம்பிரதாயங்களை பேசும் கதைகள்), 'வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை' (1988), 'காட்டில் ஒரு மான்' (2000), 'சக்கர நாற்காலி', 'தண்ணியடிக்க', 'வற்றும் ஏரியின் மீன்கள்' (2007), 'பயணப்படாத பாதைகள்','சொல்லாத கதைகள்' (சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பற்றிய பெண்கள், தலித் எழுத்தாளர்கள் ஆகியவர்களின் வாய்மொழி வரலாற்றுப்பதிவு) என்பன அம்பையின் வெளிவந்த தமிழ் நாவல்கள்.

அம்பையின் எழுத்துலகிற்கு ஊக்கம் தந்து அவரை எழுத்துலகில் துலங்க வைத்த அல்லது ஒளிவிடவைத்த நாவல் "அந்தி மாலை" அந்த நாவலுக்கு அவருக்கு கலைமகள் நாராயணசாமி ஐயர் நாவல் பரிசுப்போட்டியில் சாதனை படைத்த நாவலாகப் பரிசினைத் தட்டிக் கொண்டமையால் அம்பையின் பெயர் வாசகர் மத்தியில் மட்டுமன்றி எழுத்தாளர்கள் மத்தியிலும் பேசப்படும் பொருளாக மாறியமை அவரை




தொடர்ந்து கதை எழுத ஊக்கம் தந்த சம்பவமாக அமைவுற்றது. கலைமகள் பத்திரிகையின் பரிசினை ஒரு பெண் எழுத்தாளர் அதுவும் பாரம்பரிய வரட்டு வேதாந்தங்கள், சமுதாயக் கொடுவினைகளுக்கு எதிராக எழுதப்பட்ட ஒரு நாவலுக்கு வழங்கப்பட்டமை ஒரு பேசுபொருளாக மாற்றம் கண்டது. அவரது நாவலுக்கு வழங்கப்பட்ட பரிசு மிகவும் பிரபலமான எழுத்தாளராக மாற்றி விட்டது. "சிறகுகள் முறியும்" என்ற நீண்ட நாவலை எழுதிவைத்துவிட்டு அதனைப் பிரசுரிக்க முடியாது அம்பை கிடப்பில் போட்டுவிட்டார். ஒரு குடும்பம் பற்றிய அந்த நவீனம் கணவன் மனைவிக்கிடையே எழும் விடயங்கள் பற்றியதாக அமைந்த போதிலும், அதில் வேலையில்லாத கணவன், பெண்ணின் அபிலாசைகளைத் தீர்க்கமுடியாத நிலையில் அவளைச் சிந்திக்கத்தூண்டுகின்றது. தாம்பத்திய உறவுதான் வாழ்க்கையா என்று எண்ணும் பெண்ணின் கதையாக அது அமைந்து விட்டமையால் அதனைப் பிரசுரிக்க பத்திரிகைகள் முன்வரவில்லை என்பது அம்பையின் ஆதங்கம்.

எழுத்தாளர் மல்சௌமி ஜேக்கப் அவர்களால் தொடுக்கப்பட்ட கேள்விக்கு விடையளிக்கும்போது பின்வருமாறு பதிலளிக்கின்றார் அம்பை: "நான் ஒரு சடப்பொருளாலான பெண் என நினைக்கவில்லை, நீங்கள் பார்க்கும் பெரும்பான்மையான பெண்களைப்போன்று நானும் ஒரு சடப்பொருள் அல்ல. கிரான் பீடி அல்லது இந்திரா நூயி போன்றவர்களைப் போலானவர்கள். ஆனால் எனது வாழ்வில் என்னென்ன வேண்டுமோ அதை யெல்லாம் செய்துள்ளேன் என்று நான் சொல்லுவேன். நான் அவற்றை பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே செய்தேன். ஆனால் நான் அவற்றை மிக்க மகிழ்ச்சியோடும், மன நிறை வோடும் செய்துள்ளேன். எனது முயற்சிப் போக்குகளில் கிடைத்த தோல்விகள் எனக்குப் படிப்பினையாக அமைந்தன. ஆய்வுகள், எழுத்துக்கள் என்னால் மேற்கொள்ளப்பட்டவை, அவற்றை என்னால் தனித்தனியாகப் பிரிக்க முடியாது, ஏனெனில் நான் மேற்கொண்ட பெண்கள் பற்றிய ஆய்வுகள் மற்றும் எழுத்துக்கள் எனது மனித வாழ்க்கை பற்றிய எண்ணமேயாகும். பெண்கள் சார்ந்துள்ள தந்தையர், கணவன்மார், சகோதரர்கள் பற்றிய மிகச் சுவையான சம்பவங்கள் என்னிடம் உண்டு. இவைதான் நான் மிகவும் முக்கிய அழுத்தம் கொடுக்கும் விடயங்களாகும். அவர்களின் வாழ்க்கைக் கதைகள், குறிப்பிடத்தக்க வகையான விழுமிய முறைமை பெண்களை அடக்கி வைத்திருக்கின்றது. ஆண்கள் பெண்களை அடக்கி வைத்திருப்பதல்ல." எனத் தான் சந்தித்த கதாபாத்திரங்கள், சமுதாய நிலைமைகள் பற்றிய கருத்தினை அவர் கொண்டுள்ளமை புலனாகின்றது.

வெங்கட் சாமிதான் அவர்கள் அம்பையைப் பற்றிக்குறிப்பிடும் போது "இந்தப் பிராபல்ய ஆலாபங்கள் எதுவும் அம்பையைக் கவர்வதாக இருக்கவில்லை. அம்பைக்கு தனக்கென சொல்வதற்கு இருப்பதைச் சொல்ல, எழுத நினைப்பவர். ஒரு சிறு பெண் தனக்கு சமூகத்தினால் கொடுக்கப்பட்ட இடம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியவர். அம்பை 'சிறகுகள் முறியும்' என்று ஒரு நீண்ட கதை எழுதினார். ஒரு கணவன் மனைவிக்கு இடையே எழுந்த உறவுச் சிக்கல் பற்றி. தன் மனைவியையும் குழந்தையையும் கவனிக்க கணவனுக்கு நேரமும் இல்லை. சம்பாத்தியமும் இல்லை. கணவனின் அன்புக்கும் கவனிப்புக்கும் ஏங்கும் மனைவிக்கு அது கிடைக்காது போகவே இந்த தாம்பத்ய உறவுக்குத்தான் என்ன பொருள் என்ற கேள்வி அவள் மனத்தில் எழுகிறது. ஆனால் அதற்காக அவள் உறவை முறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறவில்லை. தனக்கு விதிக்கப்பட்டது இதுதான் என்று அவள் சமாதானம் செய்து கொள்கிறாள். இந்தக் கதையை வைத்துக்கொண்டு அம்பை அணுகிய எந்தப் பத்திரிகையும் அதைப் பிரசுரிக்க மறுத்து விட்டது. பின் பல வருடங்கள் பிரசுரமாகாது கிடந்த அந்தக் கதை கணையாழி என்னும் ஓர்




(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



# சமத்துவத் தலைவர் (LIBARA)




## சமத்துவத் தலைவர் (LIBARA)

இருபத்தைந்து வயதுள்ள யோகநாதன் ரதீசன், அவரது நெருங்கிய இரு நண்பர்களுடன் நோர்வே நாட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வரும்போது பேர்கன் விமான நிலையம் நோக்கிப் பயணிக்கின்றனர். வரும் வழியில் நோர்வே நாட்டின் தொலைத்தொடர்பு நிறுவனமான டெலிநோர் எனும் நிறுவனத்தின் பிரமாண்டமான கட்டடத்தைக் காண்கின்றனர். இப்படியொரு பெரிய நிறுவனத்தை நாமும் உருவாக்கினால் எப்படி இருக்கும் என்று ஆசைப்படுகின்றனர் அன்றே விமான நிலையத்திலிருந்தே ஒரு திட்டமும் போடுகிறார்கள். வயது இருபதுகளிலேயே உள்ள அந்த இளைஞர்களுக்கு இதுவரை ஒரு நிறுவனத்தை நடத்திய அனுபவம் ஏதுமில்லை. அதிகமாகப் பணமும் இருக்கவில்லை. ஆனாலும் வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமென்னும் ஒரு கனவு இருந்தது.

அந்த மூன்று தமிழ் இளைஞர்களின் பெயர்கள் லியோன், பாஸ்கரன், ரதீசன். ஆங்கிலத்தில் அவர்கள் மூவரின் பெயர்களின் முதலிரு எழுத்துகளைக் கொண்டு லிபாரா என்று அவர்கள் உருவாக்கப் போகும் நிறுவனத்துக்குப் பெயரிடுகின்றனர். இது நடந்தது 2001ஆம் ஆண்டில்.

கனவு காண்பது சுலபம். ஆனால், அதை நனவாக்குவது எவ்வளவு கடினம் என்பது அவர்களுக்கு விரைவிலேயே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. நிறுவனத்தை உத்தியோக பூர்வமாக நிறுவுவதற்கே ரதீசன் தனது சகோதரனின் கடன் அட்டையில்தான் பணம் செலுத்தி நிறுவவேண்டி வந்தது. ஆரம்பத்தில் அவர்கள் வெளிநாடுகளுக்கு அழைப்பை ஏற்படுத்துவதற்கான தொலைபேசி அட்டைகளை வாங்கி விற்றுத்தான் அவர்களது நிறுவனத்தை ஆரம்பித்தனர். ஆனால், அவர்களை நம்பித் தொலைபேசி அட்டைகளைக் கொடுக்கப் பல நிறுவனங்கள் தயாராக இருக்கவில்லை. தோல்விகளைக் கண்டு மனம் தளராத அந்த இளைஞர்களின் விடாமுயற்சி இறுதியில் பயனளிக்கிறது. ஒரு நிறுவனம் ஐம்பதாயிரம் யூரோவிற்கு மேல் பெறுமதியுள்ள அட்டைகளை அவர்களுக்குக் கொடுக்கிறது. மூன்றே நாட்களில் அவற்றை விற்று அவர்களது வெற்றியின் முதல் படியில் ஏறினார்கள். இவர்களது இந்த முதலாவது தொலைபேசி அட்டைகள் வியாபாரம் தொடங்கியது நெதர்லாந்து நாட்டில்.

### தொலைபேசி அட்டைகள் பற்றி ஒரு விளக்கம்...

அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் வீட்டிலிருக்கும் தொலைபேசிகளில் இருந்து வெளிநாடுகளுக்கு அழைப்பு ஏற்படுத்துவதற்கான செலவு மிகவும் அதிகம். அதனால் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களுக்குத் தங்கள் ஊருக்கு அழைத்து உறவினர்களோடு பேசுவது மிகவும் சிரமமானதாக இருந்தது. இத்தேவையைப் பூர்த்தி செய்ய இந்தத் தொலைபேசி அட்டைகள் விற்கும் நிறுவனங்கள் அவர்களுக்கு ஒரு சேவையை வழங்கின. அந்த அட்டையிலுள்ள ஓர் உள்ளூர் இலக்கத்திற்கு அழைப்பு ஏற்படுத்திப் பின்னர் அதில் அந்த அட்டையிலுள்ள உங்கள் பிரத்தியேக எண்களை அழுத்திப் பின்னர் வெளிநாட்டு இலக்கத்தை அழுத்தித் தொடர்பு கொள்ளலாம். இதற்கான மொத்தச் செலவு நேரடியாக அழைப்பு ஏற்படுத்துவதற்கான செலவோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவானதாகும். இந்த அட்டைகளின் பாவனையாளர்கள் முக்கியமாக வெளிநாடுகளிருந்து வந்து குடியேறியவர்களே. இது ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பொதுவாக இருந்த நடைமுறை.

மூன்று நண்பர்களும் ஒன்றாகச் சேர்ந்து மூன்றில் ஒரு பங்குடன் லிபாரா நிறுவனத்தை ஆரம்பித்தனர். ரதீசனைத் தலைமைச் செயலதிகாரியாக நியமித்த மற்ற இரு நண்பர்களும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர். இந்த மூவரின் கூட்டணியின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்னவென்றால், நான் பெரிது நீ பெரிது என்று ஆணவமற்று அவரவருக்கான பொறுப்பைச் செவ்வனே செய்வதே. அதன்மூலம் மூவரும் கருத்து வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றாக இயங்கி நிறுவனத்தை வளர்க்கக் கூடியதாக இருந்தது.

அவர்களது கூட்டணியின் வெற்றிக்கு உதாரணமாக இரண்டு கதைகளும் ரதீசன் சொல்லியுள்ளார். சிறு வயதில் அவரது தாயாரிடமிருந்து கற்ற கதை ஒன்று. ஒரு சிறு தடியை உடைப்பது சுலபம். ஆனால், இரண்டு மூன்று தடிகளைச் சேர்த்து உடைப்பது சிரமம். அதுபோலச் சகோதரர்கள் ஒற்றுமையாக இருந்தால் அவர்களது பலம் அதிகம் என்பது ரதீசனின் தாயார் சொல்லிக் கொடுத்த பாடம். மேலும் குர்ஆனில் இருந்து வந்த நீதிக் கதை ஒன்றையும் அவர் அறிந்ததாகச் சொன்னார். அதில் இரு புறாக்களைப் பிடித்து அவற்றின் கால்களை ஒன்றாகக் கட்டிவிட்டுப் பறக்கச் சொன்னால் அந்தப் புறாக்களால் ஒழுங்காகப் பறக்க முடியாது. ஆனால், இரண்டையும் சுதந்திரமாகப் பறக்க விட்டால் இரண்டு பறவைகளாலும் உச்சத்தை எட்ட முடியும் என்பதே அக்கதையின் சாராம்சம். அதேபோல நண்பர்கள் மூவரும் ஒற்றுமையாக இருந்தது மட்டுமல்லாமல் அவரவர் பணியை மற்றவரின் தலையீடில்லாமல் சுதந்திரமாகச் செய்ததன் மூலம் அனைவரும் உயர்ந்து செல்லக் கூடியதாக இருந்தது.

இங்கிலாந்தில் வாழும் ந. ஜெயரூபலிங்கம் “தலபுராணம்” என்ற நூலில் (வெளியீடு: மெட்ராஸ் பேப்பர்) இருந்து எமது வாசகர்களிற்காக ‘சமத்துவத் தலைவர்’ என்ற இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது. அவர்களிற்கு “விளம்பரம்” பத்திரிகை நன்றியை தெரிவிக்கிறது. - பதிப்பாளர்

